நிருபர்கள் தேவை
தமிழகமெங்கும் தினசரி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் தேவை. நிருபராக முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : 9080728304
மின்னஞ்சல்: dhinatamil.tn@gmail.com

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

www.dhinatamil.com — மாற்றத்தின் ஆரம்பம் — dhinatamil

.நாகர்கோவில் பதிப்பு . 27.02.2026 . மலர் 04 . இதழ் 57. வெள்ளிக்கிழமை | dhinatamil | . NAGERCOIL EDITION . 27.02.2026 . VOL 04 . ISSUE 57. FRIDAY . 4 PAGES . Rs. 5

உங்கள் அபிமான தின தமிழ் செய்திகளை Whatsapp - ல் பின் தொடர

## தமிழ்நாடு சட்டமன்றத்துக்கு

# ஒரே கட்ட தேர்தல் !

சென்னை, பிப்.27-

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை நேர்மையாக, வெளிப்படைத் தன்மையுடன் ஒரே கட்டமாக நடத்த வேண்டும் என்று சென்னையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரிடம் அரசியல்கட்சிப் பிரதிநிதிகள் வலியுறுத்தி உள்ளனர்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் விரைவில் நடைபெற உள்ளது. தேர்தலை நேர்மையாக, வெளிப்படைத் தன்மையுடன் நடத்துவதற்கான ஆலோசனைகளைப் பெறும் வகையில் தமிழகத்தில் உள்ள 12 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் ஆணையம் அழைப்பு விடுத்தது.

அதன்படி, தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் தலைமையில் சென்னையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில், தேசியக் கட்சிகளான பாஜக, காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், பகுஜன் சமாஜ், ஆம் ஆத்மி, தேசிய மக்கள்கட்சி மற்றும் மாநிலக் கட்சிகளான திமுக, அதிமுக, தேமுதிக, விசிக ,நாதக ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்று, பல்வேறு ஆலோசனைகளை வழங்கினர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவர் நல்லகண்ணுவின் இறுதி அஞ்சலி நிகழ்வுக்குச் சென்றதால் அக்கட்சி சார்பில் யாரும் பங்கேற்கவில்லை. அக்கட்சியின் கருத்துகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் தெரிவித்தார். தமிழகத்தில் ஒரே கட்டமாக தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதையே அனைத்துக் கட்சியினரும் வலியுறுத்தினர்.

இதைத் தொடர்ந்து, தேர்தலை பாதுகாப்பாக நடத்துவது தொடர்பாக மாவட்ட ஆட்சியர்கள், எஸ்.பி.க்கள், ஐ.ஜி.க்களுடன் தலைமை தேர்தல் ஆணையர் ஆலோசனை நடத்தினார்.

வாக்குச்சாவடிகள் மற்றும் தேர்தல் பணியாளர்களின் தயார்நிலை, வாக்கு எண்ணும் மையங்கள், தேவையான பாதுகாப்பு படையினர், பறக்கும் படைகள் அமைப்பது உள்ளிட்டவற்றில் செய்யப்பட்டுள்ள முன்னேற்பாடுகள் குறித்து மாவட்ட வாரியாக கேட்டறிந்தார்.

இந்நிலையில், ஆலோசனைக் கூட்டத்துக்குப் பிறகு, செய்தியாளர்களிடம் கட்சித் தலைவர்கள் கூறியதாவது:

பாஜக மாநிலச் செயலாளர் கராத்தே தியாகராஜன்: வாக்காளர்களுக்குப் பணம் கொடுக்க திமுக நிர்வாகிகள் இப்போதே தயாராக எடுத்து வைத்துவிட்டனர். அதைக் கண்டறிந்து வருமான வரித் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காவல் துறை முக்கிய அதிகாரிகள், புகாரில் சிக்கியுள்ள தேர்தல் நடத்தும் அதிகாரிகளை மாற்ற வேண்டும். ஒரே கட்டமாக தேர்தல் நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தோம். உரிய நடவடிக்கை எடுப்பதாகவும், பள்ளி தேர்வு, பண்டிகை போன்றவற்றை கணக்கில் கொண்டுதான் தேர்தல் நடத்தப்படும் என்றும் தலைமை ஆணையர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் முன்னாள் தலைவர் கே.வீ.தங்கபாலு: வாக்குச்சாவடி முகவர்களுக்கு கொடுக்கும் பட்டியல் - தேர்தல் ஆணையத்திடம் உள்ள பட்டியல் இடையே வித்தியாசம் உள்ளது. இதனால் புதிய வாக்காளர்கள் விவரம் தெரியவில்லை. இதை சரிசெய்ய வேண்டும். பிரதமருக்கும், எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்திக்கும் ஒரே விதிகளை பின்பற்ற வேண்டும் என வலியுறுத்தினோம்.

அதிமுக முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார்: விதிமீறல்களைத் தடுக்க அனைத்து வாக்குச்சாவடிகளிலும் கண்காணிப்பு கேமரா வைக்க வேண்டும். பாரபட்சமின்றி அனைத்துக் கட்சிகளுக்கும் பிரச்சார அனுமதி வழங்க வேண்டும்.

பறக்கும் படையில் மாநில அரசு ஊழியர்களுக்கு பதிலாக மத்திய அரசு ஊழியர்களை இடம் பெறச் செய்ய வேண்டும். நடத்தை விதிகள் அமலுக்கு வந்தவுடன் ஆளுங்கட்சி பேனர்களை அகற்ற வேண்டும். ஆளுங்கட்சிக்கு சாதகமாகவே தேர்தல் நடத்தும் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, அவர்களை தேர்தல் ஆணையமே நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம்.

மார்க்சிஸ்ட் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம்: தேர்தல் நேர்மையாக நடைபெறுவதை உறுதிப்படுத்த வேண்டும். பணம் கொடுப்பதைக் கட்டுப்படுத்த வேண்டும். முதலில் வருவோருக்கு முன்னுரிமை அடிப்படையில் பிரச்சாரத்துக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் சார்பில் வலியுறுத்தினோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## தலைமை தேர்தல் ஆணையரிடம் கட்சிகள் வலியுறுத்தல் !!




தலைமை தேர்தல் ஆணையரிடம் நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அளித்த மனுவில், ‘தமிழகம், புதுச்சேரியில் ஒரே கட்டமாக தேர்தல் நடத்த வேண்டும். பிரச்சாரம் செய்யும் அவகாசத்தை 40 நாட்களாக அதிகரிக்க வேண்டும்’ என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

வருமான வரித் துறை, அமலாக்கத் துறை, சுங்கத் துறை அதிகாரிகளுடன் தலைமை தேர்தல் ஆணையர் ஆலோசனை நடத்துகிறார். தேர்தல் செலவினத்தை கண்காணிப்பது, வங்கி அதிகாரிகளுடன் இணைந்து பணப் பரிவர்த்தனை, டிஜிட்டல் பணப் பரிமாற்றத்தை கண்காணிப்பது, பணப் பட்டுவாடாவை தடுப்பது உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது.

# காட்டம் !

## தவெக மீது உயர்நீதிமன்றம் - எத்தனை தேர்தலில் போட்டியிட்டுள்ளீர்கள்?



சென்னை, பிப்.27-

தவெக தொடர்ந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், `எத்தனை தேர்தல்களில் போட்டியிட்டுள்ளீர்கள்?' என காட்டமாக கேள்வி எழுப்பியது.

அரசியல் கட்சிகளின் ரோடு ஷோக்களை முறைப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை எதிர்த்து, தவெக தாக்கல் செய்த மனு குறித்து தமிழ்நாடு அரசு மூன்று வாரங்களில் பதிலளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கரூரில் தவெக சார்பில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 உயிரிழந்தனர்.

இதையடுத்து, உயர் நீதிமன்ற உத்தரவின்படி, அரசியல் கட்சிகள் ரோடு ஷோ நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்த தமிழக அரசு, ஜனவரி 5ம் தேதி அரசிதழில் வெளியிட்டது.

இந்நிலையில், அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை ரத்து செய்யக் கோரி தவெக இணை பொதுச்செயலாளர் சி.டி.ஆர். நிர்மல்குமார் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு, தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்த போது, த.வெ.க. தரப்பில், `பொதுக் கூட்டங்கள் நடப்பதற்கு 30 நாட்களுக்கு முன் அனுமதி கோரி விண்ணப்பிக்க வேண்டும் என்ற விதி தன்னிச்சையானது. அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுக்கு முன்னுரிமை அளிப்பது பாரபட்சமானது. நிகழ்ச்சி பாதுகாப்பு தொடர்பாக அரசு மேற்கொள்ள வேண்டிய பொறுப்புகள் கட்சிகள் மீது திணிக்கப்படுகின்றன' என வாதிடப்பட்டது.

அப்போது குறுக்கிட்ட தலைமை நீதிபதிகள், `இந்த விதிகளில் என்ன தவறு உள்ளது. கரூரில் நடந்த வேதனைக்குரிய சம்பவத்தை தொடர்ந்து உயர் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் தான் இந்த வழிகாட்டு விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. வருமான வரி விலக்கு பெறுவதற்காக பல கட்சிகள் காளான்கள் போல துவங்கப்படுகின்றன. அவை தேர்தல்களில் போட்டியிடுவதில்லை. பல தேர்தல்களில் போட்டியிட்டு, எம்.பி. - எம்.எல்.ஏ.க்களை பெற்ற நீண்ட வரலாறு கொண்ட கட்சிகளுக்கு முன்னுரிமை கொடுப்பதில் என்ன தவறு?' எனக் கேள்வி எழுப்பினார்.

மேலும், த.வெ.க. எத்தனை தேர்தல்களில் போட்டியிட்டுள்ளது எனவும் தலைமை நீதிபதி கேள்வி எழுப்பினார்.

அரசுத்தரப்பில், ``இந்த வழிகாட்டி வழிமுறைகள்படி த.வெ.க. இரண்டு கூட்டங்களை நடத்தியுள்ளது. இந்த நிபந்தனைகளின்படி 5000 க்கும் மேற்பட்டோர் கலந்து கொள்ளும் கூட்டங்களுக்கு விதிகள் வகுக்கப்பட்டுள்ளதால், அதை தவிர்க்க 4,998 பங்கேற்பாளர்க்ள் என கூறி விண்ணப்பிக்கின்றனர். ஒரே நாளில் ஒரே இடத்துக்கு பல கட்சிகள் விண்ணப்பிக்கும் போது, அங்கீகரிக்கப்பட்ட கட்சிக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. இல்லாவிட்டால் முதலில் வருவோருக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது" என விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், ``பெரும்பாலான அரசியல் கட்சிகள் இந்த வழிகாட்டு விதிமுறைகளை ஏற்றுள்ள நிலையில், மனுதாரர் கட்சி மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளது. சேலத்தில் வெயில் காரணமாக ஒருவர் இறந்த பிறகு தான், வேலூரில் நடந்த நிகழ்ச்சியில் மேற்கூரை அமைத்துள்ளனர்" என தெரிவிக்கப்பட்டது.

ஆன்லைனில் விண்ணப்பங்களை பெறுவது குறித்து அரசு ஏன் பரிசீலிக்க கூடாது என அரசுத்தரப்பை கேட்ட நீதிபதிகள், த.வெ.க. மனுவுக்கு மூன்று வாரங்களில் பதிலளிக்க தமிழக அரசுக்கு உத்தரவிட்டனர்.

## சங்கரன்கோவில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து திரவம் - மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ வழங்கினார் !



சங்கரன்கோவில் . பிப்.27-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து திரவம் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்து கொண்டு குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து திரவம் வழங்கும் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார் இதில் டாக்டர் மகாலட்சுமி, சங்கரன்கோவில் யூனியன் சேர்மன் லாலாசங்கரபாண்டியன், நகராட்சி சேர்மன் கௌசல்யா வெங்கடேஷ், நகர செயலாளர் பிரகாஷ் , நகராட்சி கவுன்சிலர் செல்வராஜ், மாணவரணி வெங்கடேஷ், இளைஞர் அணி ஜான்சன் ,ஐ டி விங்க் சிவசங்கரநாராயணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கோவை மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை அணியின் துணை அமைப்பாளராக பாரதி செல்வனை தேர்வு செய்ய பரிந்துரை செய்த பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரா சாமி அவர்களுக்கும் ஜமீன் ஊத்துக்குளி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அகத்தூர் சாமிக்கும் ஜமீன் ஊத்துக்குளிபேரூராட்சி துணைத் தலைவர் சையத் இப்புராகிருக்கும் சால்வை அணிவித்து வாழ்த்து பெற்றார்.

## பாண்டியாபுரம் ஊராட்சி ஒன்றிய பள்ளிக்கு முன்னாள் மாணவர்கள் கல்வி சீர்வரிசை

**சங்கரன்கோவில். பிப்.27.**

**தென்காசி மாவட்டம் மேல நீலிதநல்லூர் ஒன்றியம் பாண்டியாபுரம் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி மற்றும் அரசு உயர்நிலைப்பள்ளி ஒரே வளாகத்தில் இயங்கி வருகின்றன. பள்ளிகளில் சுமார் 200 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர்.பாண்டியாபுரம் கிராம மக்கள் மற்றும் பெற்றோர்கள் ஒத்துழைப்புடன் தமிழகத்தில் சிறந்து விளங்கும் ஓர் பள்ளியாக அரை நூற்றாண்டு கடந்தும் நாளது வரை செயல்பட்டு வருகிறது. தென்காசி மாவட்டத்திலே இரண்டாவது முறையாக முறையாக, தங்களது குழந்தைகள் படிக்கும் பள்ளிக்கு சுமார் 1 இலட்சம் மதிப்பில், பேரணியாக சென்று நேற்று கல்விச்சீர் வழங்கப்பட்டது. இதில் பள்ளிகளுக்கு தேவையான தளவாடச் சாமான்கள், ஆசிரியருக்கான ஷேர், பள்ளிக்கு தேவையான சாக்பீஸ், பேப்பர் , மாணவர்களுக்கு தேவையான நோட், எழுது பொருட்கள் மற்றும் விளையாட்டு பொருட்கள் என அனைத்து சீர்வரிசை பொருட்கள் வழங்க பட்டது. பேரணியை, வட்டாரக் கல்வி அலுவலர் இராமச்சந்திரன் மற்றும் ஒன்றிய கவுன்சிலர் கணேசன் கொடியசைத்து துவக்கி வைத்தனர்.கொண்டுவரப்பட்ட 1 லட்சம் மதிப்பாலான சீர்**



**வரிசை பொருட்களை தலைமை ஆசிரியர்களான இளையபெருமாள் மற்றும் ஸ்டீபன் ஞானராஜ் ஆகியோர்களிடம் வழங்கப்பட்டது. தொடர்ந்து பள்ளிக்கு முப்பெரும் விழாவான கல்விச்சீர் திருவிழா, மற்றும் பள்ளி ஆண்டு, முன்னாள் மாணவர்கள் சந்திப்பு விழா மேலநீலிதநல்லூர் வட்டாரக் கல்வி அலுவலர் இராமச்சந்திரன் தலைமையில் நடந்தது. இதில் பள்ளி ஆசிரியர்கள்,, மாணவ, மாணவிகள்,வெள்ளாளங்குளம் ஊராட்சி, பாண்டியாபுரம் குடியிருப்பு மக்கள், பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.**

## நாகர்கோவிலில் ரயில் முன் பாய்ந்து டிரைவர் தற்கொலை

நாகர்கோவில் பிப்.27-

நாகர்கோவில் அருகே பள்ளிவிளை ரயில்வே ரோடு பகுதியை சேர்ந்தவர் செல்லதுரை மகன் ராஜ்குமார் (30 ). டிரைவரான இவருக்கு மனைவியும் இரண்டு பிள்ளைகளும் உள்ளனர். ராஜ்குமார் கடந்த சில வருடங்களுக்கு முன்பு சென்னையில் குடும்பத்தோடு தங்கி வேலை பார்த்து வந்தார். பின்னர் மனைவி பிள்ளைகளுடன் நாகர்கோவில் வந்து இங்கு வசித்து வந்தார்.

இந்த நிலையில் நேற்று நாகர்கோவில் டவுன் ரயில் நிலையம் அருகே ராஜ்குமார் சென்றுள்ளார். அப்போது அந்த வழியாக வந்த ரயில் முன்பு அவர் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து நாகர்கோவில் ரயில்வே போலீசருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று பிணத்தை கைப்பற்றி, பிரேத பரிசோதனைக்காக குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். ராஜ்குமார் தற்கொலை செய்து கொண்டதற்கான காரணம் குறித்து நாகர்கோவில் ரயில்வே போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ரூ.40 லட்சம் மதிப்பில் கூடுதல் வகுப்பறை கட்ட பூமிபூஜை : பணிகளை துவக்கி வைத்த மதியழகன் எம்.எல்.ஏ.



கிருஷ்ணகிரி, பிப்ரவரி. 27-

கிருஷ்ணகிரி, பெங்களூரு சாலையில் உள்ள ஆர்.சி.,பாத்திமா அரசு நிதிஉதவி பெறும் ஆண்கள் துவக்கப்பள்ளியில், 40 லட்சம் ரூபாய் மதிப்பில், நான்கு புதிய வகுப்பறை கட்டடம் கட்டுவதற்கான பூமிபூஜை நடந்தது. பள்ளி ஆசிரியை நிர்மலா ராணி வரவேற்றார். பள்ளி தலைமை ஆசிரியர் சேகர், தாளாளர் அருள்ராஜ், தென்கனிகோட்டை அரசு நிதிஉதவி பெறும் பள்ளி தலைமை ஆசிரியர் ஜோசப்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பர்கூர், தி.மு.க., ஸ்ரீ எம்.எல்.ஏ., மதியழகன் பேசியதாவது:

அரசியல்வாதிகளாகிய நாங்கள் எவ்வளவு மன அழுத்தத்தில் இருந்தாலும் உங்கள் முகங்களை பார்க்கும்போது அனைத்தையும் மறந்து விடுகிறோம். அனைவருக்கும் பள்ளி, கல்லூரி காலங்களில் ஆசிரியர்கள் வழிநடத்தும் ஒழுக்கம், கல்வி முறையே எதிர்காலத்தில் நம்மை வழிநடத்துகிறது. அது எனக்கும் பொருந்தும். நானும் இது போன்று கிறிஸ்தவ பள்ளி, கல்லூரியில் பயின்று ஈகை குணத்தை வளர்த்துக் கொண்டதால் தான், நான் தற்போது அனைவருக்கும் உதவி செய்து வருவதாகவும் நெகிழ்ச்சியுடன் கூறினார். நான் இன்று பள்ளிக்கு புதிய வகுப்பறைகளை கட்டும் பணியை துவக்க வந்துள்ளேன். இப்பள்ளிக்கு, என் சொந்த நிதியில், 5 லட்சம் ரூபாய் கொடுத்து தேவையான உபகரணங்கள் வாங்க வலியுறுத்த உள்ளேன். மாணவர்கள் தரமான கல்வியை பெற்று எதிர்காலத்தில் சிறந்து விளங்க வேண்டும் என பேசினார். தொடர்ந்து, வகுப்பறை கட்டுமான பணிகளை துவக்கி வைத்தார். கிருஷ்ணகிரி, தி.மு.க., நகர பொறுப்பாளர்கள் அஸ்லம், வேலுமணி, நகராட்சி துணை தலைவர் சாவித்திரி, நகராட்சி கவுன்சிலர்கள், பள்ளி ஆசிரிய, ஆசிரியைகள், 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# புதூரில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 78வது பிறந்த நாளை முன்னிட்டு அஇஅதிமுக சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்




விளாத்திகுளம், பிப்ரவரி. 27-

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள புதூரில் ஜெயலலிதாவின் 78 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அதிமுக சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது, இதில் கலந்து கொண்டு பேசிய முன்னாள் அமைச்சரும் தற்போதைய கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினருமான கடம்பூர் ராஜீ பேசுகையில்,

பாராளுமன்ற தேர்தலில் நம் கூட ஒருவர் இருந்தார்கள், அவர்கள் தற்போது திசை மாறிப் போய்விட்டார்கள், திசை மாறி போனார்கள்,

இந்தத் தேர்தலில் நீங்கள் டப்பு டப்புன்னு இரட்டை இலையை பார்த்து அமுக்குங்க,தேர்தல் முடிந்த பிறகு பட்டு பட்டுன்னு உங்க வீட்டில பத்தாயிரம் ரூபாய் வந்து விழும்,

ஸ்டாலின் என்ன பேசுகிறார் என்றே தெரியவில்லை பூஜ்ஜியமும் பூஜ்ஜியமும் சேர்ந்தால் பூஜ்ஜியம் தான் பெரிய அறிவாளி இவர்தான் கண்டுபிடிச்சிருக்காரு. 0+0 = 0, ஆமா நாங்க ரெண்டு பூஜ்ஜியம் வாங்குவோம், அந்த ரெண்டு பூஜ்ஜியத்திற்கு முன்னாடி ரெண்டு சேர்த்து 200 வாங்குவோம்,199 கூட கிடையாது.

திமுக ஒரு முறை ஆட்சிக்கு வந்தால் மறுமுறை ஆட்சிக்கு வந்த ராசி கிடையாது திமுகவுக்கு, ஒருமுறை ஆட்சிக்கு வந்தால் மக்களின் வெறுப்பை சம்பாதித்து விடுவார்கள்.

தேர்தல் அறிக்கையில் 100 நாள் வேலையை 125 நாளாக அறிவித்தவர் பாரத பிரதமர் நரேந்திர மோடி, அதையும் தாண்டி எடப்பாடி சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றவுடன் 125 நாளை கூடுதலாக 25 நாள் சேர்த்து 150 நாளாக உயர்த்த உள்ளதாக கடம்பூர் ராஜீ பேசினார்.

இந்த விழாவுக்கான ஏற்பாட்டினை அதிமுக ஒன்றிய செயலாளர்கள் தனஞ்செயன்,தனவதி, நகர செயலாளர் ஆண்டி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சின்னப்பன், அதிமுக மாவட்ட தகவல் தொழில்நுட்ப செயலாளர் மோகன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் சத்யா, தூத்துக்குடி மாவட்ட மகளிர் அணி துணை செயலாளர் பிரியா,ஒன்றிய செயலாளர்கள் மகேஷ்,ராமச்சந்திரன், போடுசாமி,பால்ராஜ், சிறுபான்மை நலப் பிரிவு சதீஷ், தகவல் தொழில்நுட்ப பிரிவு ஆனந்த்,மருதுபாண்டி, சுரேஷ், முன்னாள் கவுன்சிலர் பெருமாள் சாமி, பிரவீன்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் பத்தாம் வகுப்பு, பதினொன்றாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு 2026க்கான அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர்நிலை பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. உடன் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இணை இயக்குநர் வை.குமார, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் எல்.ரெஜினி ஆகியோர் உள்ளனர்.

# ஈத்தாமொழி அருகே விபத்தில் காங்கிரஸ் பிரமுகர் மகன் உயிரிழப்பு

நாகர்கோவில், பிப்.27–

நாகர்கோவில் அருகே மேலசூரங்குடி பகுதியை சேர்ந்தவர் சிவசாமி. இவர் மாநகர் மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவராக உள்ளார். இவரது மகன் அபினேஷ் (29). அபினேஷ் மனைவி சிவரஞ்சனிக்கு கடந்த சில வாரங்களுக்கு முன்பு குழந்தை பிறந்தது . சம்பவ தினம் கீரிவிளை என்ற இடத்தில் உள்ள பெற்றோர் வீட்டில் இருந்த அவரது மனைவி குழந்தையை பார்க்க அபினேஷ் சென்றுள்ளார். மனைவி குழந்தையை பார்த்துவிட்டு வீட்டிற்கு பைக்கில் வந்து கொண்டிருந்தபோது, ஈத்தாமொழி அருகே பொட்டல் சந்திப்பு பகுதியில் வைத்து அந்த வழியாக வந்த மற்றொரு பைக் அபினேஷ் ஒட்டிய பைக் மீது மோதியது.

இதில் தூக்கி வீசப்பட்ட அபினேஷ் படுகாயம் அடைந்தார். அவரை உடனே அக்கம் பக்கத்தினர் மீட்டு நாகர்கோவில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு சிகிச்சை தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி நேற்று அபினேஷ் உயிரிழந்தார். ஈர்த்தாமொழி போலீசார் பிரேத பரிசோதனைக்காக குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். காங்கிரஸ் பிரமுகர் மகனின் மரணத்தால் நேற்று மாவட்ட காங்கிரஸ் சார்பில் நடைபெற இருந்த ஆர்ப்பாட்டம் ரத்து செய்யப்பட்டதாக மாநகர் மாவட்ட காங்கிரஸ் அறிவித்துள்ளது.

உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை
Whatsapp - ல்
பின் தொடர

# மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அத்திகுளம் சிஎஸ்ஐ கிறிஸ்துவ நாடார் உறவினர் சங்கம் செயலாளர் உறுப்பினர்களுடன் கோரிக்கை மனு

மதுரை, பிப்ரவரி 27–

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அத்திகுளம் சிஎஸ்ஐ கிறிஸ்துவ நாடார் உறவினர் சங்கம் செயலாளர் உறுப்பினர்களுடன் கோரிக்கை மனு இந்த மனு குறித்து செயலாளர் பிரதிவிராஜன் கூறியதாவது

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவில் இயங்கி வரும் அத்திகுளம் சி.எஸ்.ஐ கிறிஸ்தவ நாடார் உறவின்முறை சார்பில் கடந்த 1971 ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் அத்திகுளம் சிஎஸ்ஐ கிறிஸ்தவ நாடார் உறவினர் சங்கத்தில் செயலாளராக செயல்பட்டு வருகிறேன். இச்சங்கத்தில் உள்ள சங்க உறுப்பினர்கள் மற்றும் மக்கள் அளித்த நன்கொடையின் அடிப்படையில் சங்கத்திற்கு பாத்தியப்பட்ட சில சொத்துக்கள் உள்ள நிலையில் மதுரை சிஎஸ்ஐ க்கு சில ஆண்டுகளுக்கு முன்பு பதவிக்கு வந்த பேராயர் ஜெய்சின் பிரின்ஸ் பிரபாகர் மற்றும் சிலர் கூட்டாக சேர்ந்து சங்க சொத்துகளை அபகரிக்கும் நோக்குடன் சிஎஸ்ஐடிஏ விற்கு எழுதிக் கொடுக்கச் சொல்லி என்னை வற்புறுத்தி வந்தனர். ஆனால் செயலாளராகிய நான் உட்பட சங்க உறுப்பினர்கள் மற்றும் ஊர் மக்கள் அனைவரும் அதனை மறுத்து விட்டோம். இதனால் ஆத்திரம் அடைந்த ஜெய் சிங் பிரபாகரன் சிஎஸ்ஐடிஏ விற்கு தான், நான் செயலாளர் என்று சொல்லிக் கொள்ளும் பெர்னாட்ஸ் ரத்தினராஜா ஆகியோர் எங்கள் ஆலயத்தில் உள்ள ஆபிரகாம் சத்திய லிங்க் சீலன் என்ற நபருடன் கூட்டு சரி செய்து அத்திகுளம் சிஎஸ்ஐ கிறிஸ்துவ நாடார் உறவின் முறையை என்ற சங்கம் அமைத்து (17–05–2025) அன்று மேற்படி நபர்கள் மோசடியாக எங்கள் சங்கத்திற்கு பாத்தியப்பட்ட பெரும் விலை மதிப்புடைய சுமார் 20 சென்ட் உள்ள திருமண மண்டபம் மற்றும் காலி இடத்தை சிஎஸ்ஐடிஏ என்ற அமைப்பிற்கு எழுதி வைத்துள்ளனர். இது குறித்து ஸ்ரீவில்லிபுத்தூர் காவல் நிலையம் மற்றும் விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோரிடம் புகார் மனு கொடுத்து இது தொடர்பாக ஸ்ரீவில்லிபுத்தூர் பிடிஎம் கோர்ட்டில் வழக்கும் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது எனவே மாவட்ட ஆட்சித் தலைவர் இது குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு மோசடியாக பத்திர பதிவு செய்து கூட்டுச் சதியில் ஈடுபட்டுள்ள ஆபிரகாம் சத்தியசீலன், ஜெய்சிங் பிரின்ஸ் பிரபாகர், பெர்னாட்ஸ் ரத்தினராஜா, மற்றும் பசுமலை சாம் ஜெபராஜ் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

# ஈரோடு அரசு ஆஸ்பத்திரி அவசர சிகிச்சை பிரிவில் போதிய வசதி இல்லாததால் பொது மக்கள் அவதி நடவடிக்கை எடுக்கும்படி ஆட்சியரிடம் மனு

ஈரோடு, பிப். 27-

ஈரோடு மாவட்ட ஆட்சியர் கந்தசாமியிடம் விடுதலை வேங்கைகள் கட்சி மாநில தலைவர் தமிழின்பன் மனு கொடுத்துள்ளார். அதில் கூறப்பட்டுள்ளதாவது

ஈரோட்டில் இயங்கி வரும் அரசு தலைமை மருத்துவமனையில் விபத்திற்கான அவசர சிகிச்சை பிரிவில் மிக நுட்பமான சிகிச்சைகளை மேற்கொள்ள ஏதுவாக அதிநவீன கருவிகள் போதுமான அளவில் இல்லை குறிப்பாக தலையில் அடிபட்டால் மூளை நரம்பியல் சம்பந்தமான சிகிச்சைகளுக்காக கோவை மற்றும் சேலத்திற்கு கொண்டு செல்வது வழக்கமாக உள்ளது இதயம் சம்பந்தப்பட்ட முக்கிய நோய்களுக்கும் இதே நிலை நீடிக்கிறது 60 லிருந்து 100 கிலோமீட்டர் தூரம் நோயாளிகளை ஆம்புலன்ஸ் வேன்கள் மூலம் கொண்டு செல்லும் போது பலர் உயிரிழந்துள்ளனர் ஆபத்தான நிலையில் உள்ளவர்களை அரசு மனையில் சேர்ப்பதற்கு பொது மக்கள் முன் வருவதில்லை தனியார் மருத்துவமனை சிகிச்சைக்காக நகை வீடு நிலம் உள்ளிட்டவைகளை அடகு வைத்து லட்சக்கணக்கில் செலவு செய்கின்றனர் கடுமையான மன உளைச்சலுக்கும் ஆளாகின்றார்கள் ஆகவே மேற் சொன்ன நோய்களுக்கு சிகிச்சை அளிக்க நல்ல அனுபவம் உள்ள தனி மருத்துவர்களை நியமிக்க வேண்டும் அது நவீன மருத்துவ உபகரணங்களை நிறுவிட வேண்டும் இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மதுரை மாநகராட்சி அலுவலகத்தில் வரி வசூல் மையங்கள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் செயல்படும்




மதுரை பிப்ரவரி 27–

மதுரை மாநகராட்சி அலுவலகத்தில் வரி வசூல் மையங்கள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் செயல்படும் என தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் மதுரை மாநகராட்சியில் உள்ள ஐந்து மண்டலத்திற்கு உட்பட்ட 100 வார்டுப் பகுதிகளில் 2025-2026 ஆம் ஆண்டுக்கு செலுத்தப்பட வேண்டிய சொத்து வரி, குடிநீர் கட்டணம், பாதாள சாக்கடை பராமரிப்பு கட்டணம், தொழில் வரி ஆகிய வருவாய் இனங்கள் மற்றும் மாநகராட்சி கடைகளுக்கான வரியில்லாத இனங்களை வருவாய் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள குழுக்கள் மூலம் தினமும் தீவிர வரி வசூல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே மதுரை மாநகராட்சி பகுதிகளில் உள்ள பொதுமக்கள் அனைவரும் எளிதாக வரி செலுத்தும் வகையில் எதிர் வரும் 31.03.2026 வரை அனைத்து சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் மாநகராட்சியின் அனைத்து வரி வசூல் மையங்களும் காலை 7.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை செயல்பட இருக்கிறது.

எனவே பொதுமக்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரி மற்றும் வரியில்லா இனங்களை நிலுவையின்றி உடனடியாக செலுத்தி மாநகராட்சியின் வளர்ச்சிப் பணிகளுக்கு முழு ஒத்துழைப்பு தருமாறு மதுரை மாநகராட்சியின் சார்பில் கேட்டுக் கொள்ளப் படுகிறது.

# முதுகுளத்தூரில் திமுக பொதுக்கூட்டம் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி.பங்கேற்பு




முதுகுளத்தூர், பிப்.27-

முதுகுளத்தூர் பஸ் நிலையம் எதிரே முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதி அளவிளான திமுக பொதுக்கூட்டத்தில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி பங்கேற்று சிறப்புரை நிகழ்த்தினார். பொதுக்கூட்டத்திற்கு ராமநாதபுரம் மாவட்ட திமுக கழக செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் தலைமை வகித்தார்.மாவட்ட அவைத்தலைவர் முன்னாள் அமைச்சர் வ.சத்தியமூர்த்தி பரமக்குடி எம் எல்ஏ முருகேசன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். மத்திய ஒன்றிய செயலாளர் கோவிந்தன் அனைவரையும் வரவேற்றார். அமைச்சர் ராஜகண்ணப்பன் பேசும்போது முதுகுளத்தூர் தொகுதியில் செய்துள்ள பணிகளை பட்டியலிட்டார். வரும் காலத்தில் பாசனத்திற்கு வைகை அணையிலிருந்து தண்ணீர் கொண்டுவரப்படும் என்றார். தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி.பேசியதாவது:. சென்னையில் பள்ளிச் சிறுமியிடம் சாப்பிட்டியா என கேட்ட போது சாப்பிட வில்லை என குழந்தை கூறியதைக் கேட்டுத்தான் காலை உணவுத்திட்டத்தை கொண்டு வந்தார் இந்த காலை உணவு திட்டம் கனடா நாட்டில் பின்பற்றப்படுகிறது. தாயுள்ளம் கொண்ட முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். பெண்கள் தினந்தோறும் பணியாரம் சுட்டுக்கொண்டிருந்தோம். அப்படிப்பட்ட பெண்களை சிங்கப் பெண்களாக மாற்றி பல்வேறு திட்டங்களை கொண்டு வந்துடாகடராகம், இஞ்சினியராகவும் உயர்த்தி சிங்கப் பெண்களாக உயர்த்தினார்... தமிழ்நாடு கல்வியில் முன்னிலையில் உள்ளது. மகளிர்விடியல் பயணம் மூலம் பெண்களுக்கு மாதம் 800 ரூபாய்-சேமிப்பு ஏற்பட்டுள்ளது இவ்வாறு பேசினார். பொதுக்கூட்டத்தில் முதுகுளத்தூர் பேரூராட்சி சேர்மனி ஏ.ஷாஜஹான், முன்னாள் எம் எல்ஏ முருகவேல், ஒன்றிய செயலாளர்கள் கமுதி வடக்கு ஒன்றிய செயலாளர் வாசுதேவன், முன்னாள் சேர்மன் கருப்பையா பூபதி மணி, ஆப்பனூர் ஆறுமுகவேல் சண்முகம் ஹரி, தூவல் அழகர்.வி.சேகர், செல்லமணி, உள்பட திரளானோர் கலந்து கொண்டனர்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

# மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு வருவாய்த்துறை சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் !



மதுரை, பிப்.27-

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வருவாய்த் துறை சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பில் 9 அம்ச கோரிக்கை களை நிறைவேற்ற வலியுறுத்தி காலவரையற்ற வேலை நிறுத்தம் மற்றும் தொடர் காத்திருப்பு போராட்டம் ஒருங்கிணைப்பாளர்கள் முகைதீன் அப்துல் காதர், ரகுபதி, ஜெயபாலன், சுரேஷ், ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் கோரிக்கைகளாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை நில அளவைத் துறையில் பணிபுரிந்து வரும் அனைத்து நிலையிலான அலுவலர்களின் உயிர் மற்றும் உடைமைகளை பாதுகாக்கவும் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கிடவும் சிறப்பு பணி பாதுகாப்புச் சட்டத்தை உடனடியாக இயற்றிடவும், அரசுப் பணியின் போது உயிரிழக்கும் அரசு ஊழியர்களின் குடும்பத்தின் சூழல் மற்றும் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு கருணை அடிப்படையில் பணி நியமனத்திற்கான உச்சவரம்பு 5% என குறைக்கப்பட்டுள்ளதை ரத்து செய்து ஏற்கனவே இருந்ததைப் போன்று 25% நிர்ணயம் செய்திட வேண்டும்.மேலும் பணியின் போது மரணமடையும் கிராம உதவியாளர் களின் வாரிசுகளுக்கு கல்வித் தகுதியின் அடிப்படையில் உரிய பணியிடம் வழங்கிட வேண்டியும், பொது மக்களுக்கான பணியை சிறப்பாக மேற்கொள்ள வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையில் அனைத்து காலியிட பணிகளையும் காலமுறை ஊதியத்தில் நிரப்பிடவும், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்படும் கிராம நிர்வாக அலுவலர்களின் கல்வித் தகுதியை பட்டப் படிப்பாக நிர்ணயம் செய்திட வேண்டும் என்பது உள்ளிட்ட 9 அம்ச கோரிக்கை களை இந்த போராட்டத்தில் வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர். சிறப்புடன் நடைபெற்ற இப்போராட்டத்தில் 200க்கும் மேற்பட்ட வருவாய் துறை சங்கங்களின் கூட்டமைப்பினர் கலந்து கொண்டனர்.

# தேவதானப்பட்டி பகுதியில் பாஜக சார்பில் “நாளை நமதே, தமிழ்நாடும் நமதே” என்ற தலைப்பில் தெருமுனை பிரச்சாரக் கூட்டம்




பெரியகுளம், பிப். 27-

தேனி மாவட்டம் பெரியகுளம் வடக்கு ஒன்றியம், தேவதானப்பட்டி பகுதியில் பாஜக சார்பில் “நாளை நமதே, தமிழ்நாடும் நமதே” என்ற தலைப்பில் தெருமுனை பிரச்சாரக் கூட்டம் மாவட்டத் தலைவர் இராஜபாண்டியன் மற்றும் ஒன்றியத் தலைவர் முருகன் ஆகியோர் தலைமையேற்றனர். மாவட்ட மகளிரணி பொதுச் செயலாளரும், சக்தி கேந்திர பொறுப்பாளருமான முத்துலட்சுமி முன்னிலையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக மோகன்தாஸ் ஜீ (பாரதிய ஜனதா கட்சி மாவட்ட துணைத்தலைவர்), த. ஒச்சாத் தேவர் (பாஜக மாவட்ட செயலாளர்), கூந்தல் ராஜேந்திரன் (பாஜக மாவட்ட செயற்குழு உறுப்பினர்), சுரேஷ் (அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் நகர் செயலாளர்), ஜபருல்லா (அதிமுக நகரச் செயலாளர்), சலீம் (அமமுக மாநில பொதுக்குழு உறுப்பினர்), கணேசன் (பாஜக ஒபிசி.அணித் தலைவர்), செந்தில்குமார் (பாஜக சட்டமன்ற பொறுப்பாளர்)குமரேசன் (நெசவாளர் பிரிவு மாவட்ட செயலாளர்), அனுஷா (பாஜக மாவட்ட மகளிரணி துணைத்தலைவர்), ஒன்றிய துணைத்தலைவர் ஆர். சக்திவேல் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் பாரதிய ஜனதா கட்சி, அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் மற்றும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கட்சிகளின் நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் மற்றும் தொண்டர்கள் பலர் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# புரட்சி பாரதம் கட்சியின் கொள்கை விளக்கப் பொதுக்கூட்டம் தலைவர் டாக்டர் பூவை ஜெகன்மூர்த்தி சிறப்புரையாற்றினார்



கிருஷ்ணகிரி பிப் 27-

புரட்சி பாரத கட்சி கிருஷ்ணகிரி ஒருங்கிணைந்த மாவட்டத்தின் சார்பில், கிருஷ்ணகிரி ரவுண்டானா அருகே கொள்கை விளக்க பொதுக்கூட்டம் மற்றும் சட்டமன்ற உரை விளக்க கூட்டம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் இ.வினோத், மாவட்டச் செயலாளர்களான ஓசூர் தியாகராஜ், பர்கூர் புரட்சிசூர்யா, வேப்பனப்பள்ளி அருண்குமார், மாநகராட்சி மாவட்ட செயலாளர் மணிவண்ணன், தளி அருண்குமார் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது. இந்த பொதுக்கூட்ட நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக புரட்சி பாரதம் கட்சியின் தலைவர் இளம் புரட்சியாளர் டாக்டர். பூவை ஜெகன்மூர்த்தி, கலந்துகொண்டு விளக்க உரையாற்றினார். அப்போது அவர் பேசும்போது, தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு மோசமான நிலையில் சென்று கொண்டிருப்பதாகவும், பள்ளி கல்லூரி மாணவர்கள் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி வருவதாகவும், பெண்கள் தமிழகத்தில் சுதந்திரமாக வெளியே வர முடியவில்லை எனவும் குற்றம் சாட்டினார். மேலும் சட்டமன்றத்தில் தான் எழுப்பும் கேள்விகளுக்கு ஆளுங்கட்சி அமைச்சர்கள் சரியான பதில் அளிப்பதில்லை எனவும், நான் கூறும் குற்றச்சாட்டை பொய் என கூறும் அமைச்சர்கள் அதற்கான ஆதாரத்துடன் சரியான விளக்கத்தை தருவதில்லை என கூறினார். திமுக ஆட்சி இன்னும் 20 நாட்களில் முடிந்துவிடும், மீண்டும் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் நடைபெறும் என நம்பிக்கை தெரிவித்தார். தேர்தல் தேதிக்காக தமிழக மக்கள் காத்திருப்பதாகவும் மக்களை வாட்டி வதைக்கும் திமுக அரசை வீட்டிற்கு அனுப்ப பொதுமக்கள் தயாராகி வருவதாகவும் கூறினார். முன்னதாக மாவட்ட அமைப்பாளர் அனுமந்தன் மாவட்ட இணைச்செயலாளர்களான வேப்பனப்பள்ளி வினோத்குமார், பர்கூர் அருணாச்சலம், கிருஷ்ணகிரி சத்யநாராயணன், ஓசூர் சிட்டி, தளி மணிகண்டன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள். மாநில பொதுச் செயலாளர் ருசேந்திரக்குமார், தலைமை நிலைய செயலாளர் பூவைமுகிலன், மாநில பொருளாளர் தொழுவூர் மாறன், துணைத் தலைவர் ஏழுமலை, ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். மணி, மது, மாதேஷ், தளி கிருஷ்ணமூர்த்தி, வேப்பனப்பள்ளி துரைராஜ், லோகேஷ், நரசிம்மன், பெருமாள், சிவா, சூர்யா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு கட்சியின் மாநில மாவட்ட, நகர, ஒன்றிய, கழக, நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். சும்மா ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட இந்த பொதுக்கூட்ட நிகழ்ச்சியில் மாவட்ட ஊடகப்பிரிவு ஹரிஹரன் நன்றியுரை ஆற்றினார்.




கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை கட்டுப்பாட்டிலுள்ள சமூக நீதி விடுதிகளுக்கு, ஓசூர் டைட்டன் இன்ஜினியரிங் அண்ட் ஆட்டோமேஷன் லிமிடெட் நிறுவனத்தின் டீல் சமூக பொறுப்பு நிதியின் கீழ் வழங்கப்பட்ட ரூ.3 இலட்சத்து 20 ஆயிரம் மதிப்பில் 25 லிட்டர் கொள்ளளவு கொண்ட 20 குடிநீர் சுத்திகரிப்பான் கருவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் விடுதி காப்பாளர்களிடம் வழங்கினார். உடன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் .பத்மலதா, டீல் நிறுவன பெரு நிறுவன சமூகப் பொறுப்புணர்வு திட்டத் தலைவர் .பாஸ்கர், வட்டாட்சியர் பேரிடர் மேலாண்மை .வெங்கடேசன் ஆகியோர் உள்ளனர்.






இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஊராட்சி ஒன்றியம், எஸ்.கொடிக்குளம் கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நடந்த தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# ஊட்டியில் தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம்




ஊட்டி, பிப்ரவரி. 27–

நீலகிரி மாவட்டத்தில் மாநில தோட்டக்கலை திட்டம் ( எஸ் எச் டி எஸ்) 2025.26 ஆம் ஆண்டின் கீழ் வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில் காய்கள் மற்றும் பழங்கள் சாகுபடிக்கான தொழில்நுட்ப பயிற்சிகள் உதகை வட்டாரம் சார்ந்த கிராமங்களுக்கு வழங்கப்பட உள்ளது. என்று தோட்டக்கலை உதவி இயக்குனர் தகவல் தெரிவித்த நிலையில் கடநாடு வருவாய் கிராமம் பெந்தட்டி வட்டார பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு தொழில் நுட்ப பயிற்சி வழங்கப்பட்டது இந்த பயிற்சியில் பெந்தட்டி ஊர் தலைவர் துரை முன்னிலை வகித்து பயிற்சியை துவக்கி வைத்தார் தோட்டக்கலை உதவி இயக்குனர் பைசல் திட்டங்களைப் பற்றி எடுத்து கூறினார் தோட்டக்கலை உதவி இயக்குனர் அனிதா பரிசோதனை மற்றும் இயற்கை வேளாண்மை மற்றும் மண்ணின் முக்கிய பங்கினை பற்றி விளக்கமாக விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார் வேளாண்மை வணிகம் மற்றும் விற்பனைத் துறை மூலம் கலந்து கொண்ட உதவி வேளாண்மை அலுவலர் அருண் சாகுபடி செய்த பொருள்களுக்கு மதிப்பு கூட்டல் மற்றும் விற்பனை பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார் மேலும் பிரிமியர் தெளிப்பு நீர் பாசனம் நிறுவனத்தின் சார்பாக கலந்து கொண்ட செல்வகுமார் மானியத்தில் தெளிப்பு நீர் பெற தேவையான ஆவணங்கள் பற்றி எடுத்துக் கூறி பல்வேறு விவசாயத்துறையை சார்ந்த விவசாயிகளுக்கு தொழில் நுட்ப பயிற்சிகள் வழங்கப்பட்டது இதில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி நோக்கங்களை புரிந்து கொண்டனர்.

(எஸ்எச்டிஎஸ்) வேளாண்மை திட்டத்தில் பயன்பெற விவசாயிகள் விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது நிறைவாக உதவி தோட்டக்கலை அலுவலர் சந்தோஷ் பயிற்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

# மதுரை விரகனூரில் பாஜக சார்பில் திமுக அரசை கண்டித்து தெருமுனை பிரச்சாரம்



மதுரை, பிப்ரவரி. 27-

மதுரை விரகனூரில் பாஜக சார்பில் திமுக அரசை கண்டித்து தெருமுனை பிரச்சாரம் சக்திகேந்திரம் பொருப்பாளர்கள் கண்ணன், மணி, ஆகியோர் தலைமையில் கிளைத் தலைவர்கள் செந்தில்முருகன், ராமச்சந்திரன்,சங்கிலி, வழக்கறிஞர் காந்தி, மற்றும் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் சத்தியா கணேசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மேற்கு மாவட்டத் தலைவர் சிவலிங்கம் மற்றும் சோலை மணிகண்டன் கலந்து கொண்டு மத்திய அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துரைத்தனர் அதனைத் தொடர்ந்து திமுக அரசின் திறனற்ற நிர்வாகத்தின்களை எடுத்துக் கூறி வருகின்ற சட்டமன்ற தேர்தலில் அதிமுக கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு உங்கள் பொன்னான வாக்குகளை பதிவு செய்து இந்திய கூட்டணிக்கு அமோக வெற்றி வாய்ப்பு வழங்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர். இந்த பிரச்சாரக் கூட்டத்தில் கட்சியின் இப்பகுதி நிர்வாகிகள் செல்வகுமார், சதீஷ் குமார், ராமமூர்த்தி முருகானந்தம் மோகன் நாகுபிள்ளை வழக்கறிஞர் ராமமூர்த்தி ஆகியோர் உட்பட கிராம பொதுமக்கள் பலர் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதற்கான ஏற்பாடுகளை பகுதி பொறுப்பாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# தாராபுரத்தில், மது கடையை இடமாற்றம் செய்யக் கோரி தவெக சார்பில், மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்




தாராபுரம், பிப்ரவரி. 27-

திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தில், தமிழக வெற்றிக் கழகம் சார்பில், திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் யுவராஜ் மகேஷ் தலைமையில், தாராபுரம் பகுதியின், முக்கிய இடமான பூக்கடை கார்னர் பகுதியில் அமைந்துள்ள அரசு மதுபானக் கடையை வேறு இடத்திற்கு மாற்றம் செய்யக் கோரி, அண்ணா சிலை அருகில், தவெக கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தின் போது மாவட்ட செயலாளர் யுவராஜ் கூறுகையில், பூக்கடை கார்னர் வழியாக, மக்கள் அன்றாட தேவைக்காக அதிகமாக வந்து செல்கின்றனர் இந்த வழியாக பள்ளி குழந்தைகள், பெண்கள் முதல் வயதானவர்கள் வரை இந்த வழியாக போகும் போது, மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். பூக்கடை கார்னர் பகுதியில் செயல்படும் மது கடையில் 24 மணி நேரமும் மது விற்பனை செய்கின்றனர். இதனால் மது பிரியர்களின் அத்து மீறல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே, தமிழக அரசு உடனடியாக பூக்கடை கார்னர் பகுதியில் உள்ள மது கடையை, இடமாற்றம் செய்ய வேண்டும். அப்படி தவறும் பட்சத்தில் மிகப்பெரிய அளவில் உண்ணாவிரத போராட்டம் நடத்தப்படும் என்று தெரிவித்தார். இந்த ஆர்ப்பாட்டத்தில் கட்சி நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு தமிழக அரசை கண்டித்து கண்டன கோஷம் எழுப்பினர்.

# ராமாநதசுவாமி கோயிலில் 1 கோடி மதிப்பிட்டிலான திட்டப்பணியை முதலமைச்சர் காணொளி மூலம் துவக்கி வைப்பு



இராமேஸ்வரம்.பிப்.27-

ராமேஸ்வரம் ராமாநதசுவாமி கோயிலில் 1 கோடி மதிப்பிட்டிலான திட்டப்பணியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்து பக்தர்களுக்கு பேருந்து சேவையை தொடங்கி வைத்தார்.

ராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோயிலில் இந்து சமய அறநிலைத்துறை சார்பில் 1 கோடி மதிப்பிட்டில் மேற்கொள்ளப்பட்ட பக்தர்கள் ஓய்வுக்கூடம்,கைபேசி மற்றும் பொருட்கள் பாதுகாப்பு வைப்பறை,பிரசாத ஸ்டால், மற்றும் பக்தர்கள் பயணம் மேற்கொள்ளும் வகையில் சிற்றுந்து சேவை தொடக்கவிழா நடைபெற்றது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்து பேருந்து சேவையை தொடங்கி வைத்தார்.

இதனைதொடர்ந்து, ராமநாதசுவாமி கோயிலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இணை ஆணையர் செல்லத்துரை தலைமை வகித்து குத்து விளக்கேற்றி வைத்து பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில், உதவி ஆணையர்கள் லட்சுமி மாலா,ரவீந்திரன்,உதவி கோட்ட பொறியாளர் மயில்வாகனன்,இளநிலை பொறியாளர் ராமமூர்த்தி, முதல்நிலை செயல் அலுவலர் முத்துச்சாமி மற்றும் பேஷ்கார் கமலநாதன் கோயில் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்டம், ஹோட்டல் கோர்ட்யார்டு மேரியாட்டில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரம் இயக்கம் சார்பில் நடைபெறும் மண்டல அளவிலான மகளிர் சுய உதவிக்குழு உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்கள் சந்திப்பு–2026 (கீளிவிணிழி ணிழிஜிஸிணிறிஸிணிழிணிஹிஸிஷி விணிணிஜி–2026) நிகழ்ச்சியினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். உசிலம்பட்டி சார் ஆட்சியர் திரு.உட்காஷ் குமார் , மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் .மு.பூமிநாதன் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# அரளிக்கோட்டை அரசு உயர்நிலைப்பள்ளியில் அமைச்சர் கேஆர்.பெரியகருப்பனின் சொந்த நிதி ரூ. 30 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட 3 கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் திறப்பு



சிவகங்கை, பிப்.27-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கானொலி காட்சி வாயிலாக பள்ளிக் கல்வித்துறையின் சார்பில், சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அரளிக்கோட்டை அரசு உயர்நிலைப்பள்ளியில் திறந்து வைக்கப்பட்ட வகுப்பறை கட்டடம் திறப்பு விழா நிகழ்ச்சியில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் பங்கேற்று குத்துவிளக்கேற்றி வைத்து சிறப்பித்து, தனது சொந்த நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடங்களையும் திறந்து வைத்து தெரிவிக்கையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் எண்ணற்ற திட்டங்கள் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவது மட்டுமன்றி, அனைத்து துறைகளும் சீரான வளர்ச்சியை பெற்றிடும் வகையில் சிறப்பான நிர்வாகம் தமிழகத்தில் நடைபெற்று வருகிறது. அதில், கல்வித்துறையில் தனி கவனம் செலுத்தி, அதற்கென அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கற்றலுக்கு தேவையான அனைத்து உபகரணங்கள் வழங்கி வருவது மட்டுமன்றி, உயர்கல்வி பயில்வதற்கும் தமிழ் புதல்வன், புதுமைப் பெண் மற்றும் உலகம் உங்கள் கையில் திட்டம் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு,

மாணாக்கர்களிடையே கற்றலுக்கான ஆர்வம் ஏற்படும் வகையில், நாளுக்கு நாள் பல்வேறு புதிய திட்டங்களும் மாணாக்கர்களின் நலன் கருதி தொலைநோக்கு சிந்தனையுடன் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவ்வாறு, திட்ட செயல்பாடுகள் மட்டுமன்றி, பள்ளிகளில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டும், நவீன மயமாக்கப்பட்டும் வருகிறது. அதனடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தில் அரசின் திட்டங்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் வாயிலாக பல்வேறு வகையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தந்த பகுதிகளில் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துவதற்கென துரிதமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அரளிக்கோட்டை அரசு உயர்நிலைப்பள்ளியில், நபார்டு

திட்டத்தின் கீழ் ரூபாய் 84.72 இலட்சம் மதிப்பீட்டில் 4 கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்டப்பட்டு மாணாக்கர்களின் பயன்பாட்டிற்கென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றையதினம் கானொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதுதவிர, திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினராகிய எனது பங்களிப்பினையும் ஏற்படுத்திடும் பொருட்டு, எனது சார்பில் நான் கொண்ட பெரும் முயற்சியின் காரணமாக இப்பள்ளிக்கென கூடுதல் வகுப்பறை கட்டுவதற்கான நிலம் ஒப்படைப்பு செய்யப்பட்டு, தற்போது நபார்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 84.72 இலட்சம் மதிப்பீட்டில் 4 கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்டப்பட்டு, அதுமட்டுமன்றி எனது சொந்தி நிதியின் கீழும் மேலும் 3 கூடுதல் வகுப்பறை ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு, இன்றையதினம் மாணாக்கர்களின் பயன்பாட்டிற்கு அர்பணிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, இப்பள்ளிக்கென சுற்றுச்சுவர் மற்றும் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தி தருவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். மாணாக்கர்களின் நலனை கருத்தில் கொண்டு, இதுபோன்ற எண்ணற்ற திட்டங்கள் மற்றும் நவீன உட்கட்டமைப்பு வசதிகள் மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாணாக்கர்கள் இதனை கருத்தில் கொண்டு, கல்வியில் சிறந்து விளங்குவது மட்டுமன்றி, விளையாட்டிலும் சிறந்து விளங்கி தங்களின் உடல் நலத்தினை சீராக பேணிக்காத்திட வேண்டும். தங்களுக்கு ஆர்வமுள்ள துறையை தேர்ந்தெடுத்து, தங்களுக்கான இலக்கினை நிர்ணயித்து, அதனை தனது குறிக்கோளாக கொண்டு, அதில் சாதித்து காட்ட வேண்டும். தங்களின் முன்னேற்றமானது தங்களது வீட்டிற்கு மட்டுமன்றி, நாட்டிற்கும் பெருமை சேர்ப்பதற்கு அடிப்படையாக திகழ்கிறது. எனவே, அரசின் திட்டங்களை மாணாக்கர்கள் முழுமையாக பயன்படுத்திக்கொண்டு, வாழ்வில் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

மேலும், இப்பள்ளியில் 2023-2024 மற்றும் 2024-2025 ஆம்கல்வியாண்டுகளில் பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பு பொது தேர்வில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு ஊக்க தொகையாக முதலிடம் பெற்றவர்களுக்கு தலா ரூ.10,000/-மும், இரண்டாம் இடம் பெற்றவர்களுக்கு தலா ரூ.5,000/- மும், மூன்றாம் இடம் பெற்றவர்களுக்கு தலா ரூ.3,000/-மும் மாணாக்கர்களுக்கு ஊக்கத்தொகையினையும், இப்பள்ளியில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கென ரூ.20,000/- புரவலர் நிதியினையும் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தனது சொந்த நிதியிலிருந்து பள்ளி தலைமையாசிரியரிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் இளங்கோவன், மாவட்ட கல்வி அலுவலர் மாரிமுத்து, உதவி பொறியாளர் விக்னேஷ்வரன், பள்ளி தலைமையாசிரியர் தொல்காப்பியன் மற்றும் ஆசிரியர்கள், மாணவ மாணவியர்கள், ஒப்பந்தாரர் விஸிசி இளங்கோ, ஊர் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கார்மல் மேல்நிலைப் பள்ளியில் பழமையான கலைகளில் ஒன்றான லெமூரியா வர்மக்களரி அடிமுறை பயிற்சி தேர்வு



சுசீந்திரம், பிப்.27-

பழமையான கலைகளில் ஒன்றான லெமூரியா வர்மக்களரி அடிமுறை பயிற்சி தேர்வு கார்மல் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது

நம் முன்னோர்கள் பயன்படுத்தி வந்த பல கலைகளில் ஒன்றான வர்மக்களரி அடிமுறை தற்போது அழிந்து வரும் சூழ்நிலையில் அதனை மீட்டெடுக்கும் வண்ணம் பள்ளி குழந்தைகளுக்கும் பொது மக்களுக்கும் இந்த லெமூரியா வர்மக்களரி அடிமுறை தெரிந்து கொள்ளவும் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகம் மற்றும் லெமூரியா வர்மக்களரி அடிமுறை உலக கூட்டமைப்பு இணைந்து நடத்திய பல்கலைக்கழக பயிற்சி தேர்வு கார்மல் மேல்நிலைப் பள்ளியில் பிப்ரவரி 22ஆம் தேதி நடைபெற்றது.இதில் தமிழ்நாடு முழுவதிலும் இருந்து 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர் நிகழ்ச்சியை நிர்வாகிகள் செல்வன் வைகுண்ட ராஜா ரிஷிநாத் மற்றும் ஆசானகள் ஒருங்கிணைந்து சிறப்பாக செய்திருந்தனர்.

# திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி அருகே குமரிக்கல்பாளையத்தில் இந்திய தொல்லியல் துறையினர் 20க்கும் மேற்பட்டோர் ஆய்வு!



திருப்பூர், பிப். 27-

இந்தியாவிலேயே உயரமான நடுகல், பெரும் கற்கால சின்னங்களான கல்வட்டங்கள் , முதுமக்கள் தாழி, பனை ஓடுகள் உள்ளதால் 10 கிலோ மீட்டர் அளவிற்கு ஒரு வருட காலத்தில் அகழ்வாராய்ச்சி பணிகள் நடைபெற உள்ளதாக இந்திய தொல்லியல் துறை திருச்சி சரக கண்காணிப்பாளர் ஆரவல்லி தலைமையில் ஆய்வு செய்தனர்.

திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி அருகே குமரிக்கல்பாளையத்தில், 3,000 ஆண்டு பழமையான தொல்லியல் எச்சங்கள் இந்தியாவிலேயே உயரமான நடுகல் அவற்றை பாதுகாக்க வேண்டும் என, அங்குள்ள கிராமமக்கள் வலியுறுத்தி வந்தனர். இக்கோரிக்கையை வலியுறுத்தியும், அந்த இடத்துக்கு அருகே தமிழ்நாடு அரசு மின் பகிர்மான கழகம் சார்பில், துணை மின் நிலையம் அமைக்கும் முயற்சியை எதிர்த்தும், 3 ஆண்டு காலமாக , தொடர் காத்திருப்பு போராட்டத்தை நடத்தினர். இங்கு கல்வட்டங்கள் ,முதுமக்கள் தாழி, பானை ஓடுகள் போன்ற வரலாற்றுச் சான்றுகள் கிடைத்து வருவதால் இந்த இடத்தை பாதுகாக்கப்பட்ட பகுதியாக அரசு அறிவிக்க வேண்டும் என்பதை கோரிக்கை விடுத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில் இன்று இந்திய தொல்லியல் துறையின் திருச்சி சரக கண்காணிப்பாளர் ஆரவல்லி தலைமையில் 20-க்கும் மேற்பட்டோர் குமரிக்கல்பாளையத்தில் அகவாராய்ச்சி பணிகளை இன்று கிராம மக்கள் ஆதரவுடன் துவங்கினர். ஒரு வருட காலத்திற்கு 10 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு அகழ்வாராய்ச்சி பணிகள் நடைபெற உள்ளதாகவும், கொடுமணலில் கிடைத்த ஆவணங்களை விட இங்கு கூடுதலான வரலாற்றுச் சான்றுகள் கிடைக்க வாய்ப்பு உள்ளதாகவும் ,ரோமானியர்கள் தமிழகத்திற்கு எப்படி வந்தார்கள், கொங்கு மண்டலத்திற்கு எப்படி வந்தார்கள் என்கிற ஆவணங்கள் கிடைத்து போன்று இந்த இடம் அதோடு தொடர்புடையதாக கருதப்படுவதால் இங்கு பெரும் கற்காலத்திற்கும் , வரலாற்று காலத்திற்கும் தொடர்புடைய வரலாற்றுச் சான்றுகள் கிடைப்பதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாக இந்திய தொல்லியல் துறையின் திருச்சி சரக கண்காணிப்பாளர் ஆரவல்லி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்திய தொல்லியல் துறையினர் இங்கு அகழ்வாராய்ச்சி பணிகளை துவங்கியது மகிழ்ச்சி அளிப்பதாகவும் ,தங்களது 3 வருட போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி என்றும் கிராம மக்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.


திருப்பூர் அருகே குமரிக்கல்பாளையத்தில் இந்திய தொல்லியல் துறையினர் அகழாராய்ச்சி பணிகளை இன்று துவங்கியுள்ளதால் கிராம மக்களை மகிழ்ச்சி அடைய செய்துள்ளது.

# தமிழ்நாடு வியாபாரிகள் சங்க பேரவை சார்பில் ஆலோசனைக் கூட்டம்



கோவை, பிப். 27

கோவை மாவட்டம் துடியலூர் பகுதியில் உள்ள தனியார் ஹோட்டலில் தமிழ்நாடு வியாபாரிகள் சங்கப் பேரவையின் 43-வது வணிகர் தின விழா மாநாட்டிற்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் கோவை மண்டல தலைவர் ப சுதர்சன் கூட்டத்திற்கு வருகை தந்த மாநில தலைவர் வணிகப் போராளி அண்ணாச்சி மற்றும் மாநில,மண்டல, மாவட்ட ,ஒன்றிய கிளை நிர்வாகிகளையும், உறுப்பினர்களையும் மேற்கு மாவட்டம் சார்பாக வரவேற்றார்.உடன் ராமசாமி,கண்ணன் ,ஜெயகுமார், பாலகுமார், அன்பரசன், கருணாகரன், ஜெயமுருகன் மேற்கு மாவட்ட தலைவர் சந்திர மோகன்,மாரிமுத்து, அர்ஜுனன், ஜெபக்குமார், பாஸ்கர், ராமகிருஷ்ணன், வினோத்குமார், கணேசன், விஜயகுமார், ஆகியோர் கலந்து கொண்டனர்.



கோவை ராமநாதபுரம் பகுதியில் உள்ள திருமண அரங்கில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் சிங்காநல்லூர் சார்பில் சமுதாய வளைகாப்பு விழா நடைபெற்றது.இதில் 100 கும் மேற்பட்ட கர்ப்பிணி பெண்களுக்கு சீ வரிசையாக தட்டு புடவை வளையல்,வழங்கப்பட்டது.உடன் அங்கன்வாடி பணியாளர்கள் தாய்மார்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.கலந்து கொண்ட அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.




# பனை மரங்கள் அனுமதியின்றி வெட்டப்படுவது: ராமநாதபுரம் மாவட்டத்தில் அதிகரிப்பு

இராமநாதபுரம் பிப்,27–

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் ரியல் எஸ்டேட் மற்றும் செங்கல் சூளைகளுக்காக பனை மரங்கள் அனுமதியின்றி வெட்டப்படுவதாக சமூக ஆர்வலர்கள் வேதனை தெரிவித்துள்ளார்,

பனை மரம் மாநில மரமாக அறிவிக்கப்பட்டு உள்ளதால், ராமநாதபுரம் மாவட்டத்தில் பனைமரங்கள் அதிகமாக இருந்தது தற்போது மாவட்ட ஆட்சியரின் முறையான அனுமதியின்றி வெட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது; மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது

ஒரு மரம் வெட்டப்பட்டால், ஈடாக 10 பனை மரக்கன்றுகளை நட்டு வளர்க்க வேண்டும் என்பது விதி. பனை மரங்களை வெட்ட மாவட்ட ஆட்சியர் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதி அவசியம்.

அனுமதியின்றி வெட்டப்படும் பனை மரங்களை அதிகாரிகள் பறிமுதல் செய்து, வெட்டுபவர்கள் மீது சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுக்க சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் மேலும் இந்த பிரச்சனைக்கு தீர்வு காண மாவட்ட ஆட்சியர் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கேரளாவில் சுகாதாரத்துறை அமைச்சர் மீது தாக்குதல் காங்கிரஸ் அலுவலகத்திற்கு தீ வைப்பு பல இடங்களில் தொண்டர்கள் மோதல்



திருவனந்தபுரம், பிப். 27–

கேரள மாநிலம் சுகாதாரத் துறை அமைச்சராக வீணா ஜார்ஜ் என்பவர் செயல்பட்டு வருகிறார். இந்த நிலையில் கேரளாவில் அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு முறையான சிகிச்சை அளிக்கப்படவில்லை என்று கூறி சுகாதாரத்துறை அமைச்சர் வீனா ஜார்ஜ் என்பவரை கண்டித்து காங்கிரஸ் போராட்டம் நடத்தி வருகிறது. அமைச்சர் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் பகுதிகளில் காங்கிரஸ் கட்சியினர் கருப்புக்கொடி காண்பித்து போராட்டம் நடத்துகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அமைச்சர் வீணா ஜார்ஜ் கண்ணூரில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட போது, அனைத்து நிகழ்ச்சிகளிலும் காங்கிரஸ் கட்சியினர் கருப்பு கொடி காண்பித்து போராட்டம் நடத்தினர்.

அதன்பிறகு அமைச்சர் திருவனந்தபுரம் திரும்புவதற்காக கண்ணூர் ரயில் நிலையத்திற்கு வந்தபோது அங்கும் காங்கிரஸ் மாணவர் அமைப்பினர் கருப்புக்கொடி காண்பித்து போராட்டம் நடத்தினர். போலீசார் அவர்களை தடுத்து நிறுத்தினார்கள். அப்போது போலீசுக்கும் போராட்டக்காரர்களுக்கு இடையில் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. போராட்டக்காரர்களுடன் வீணா ஜார்ஜ் வாக்குவாதம் செய்தார். இந்த சமயத்தில் மாணவர் அமைப்பினர் அமைச்சர் வீணா ஜார்ஜை தாக்கியதாக கூறப்படுகிறது. இதில் அவரது கழுத்திலும் கையிலும் காயம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

உடனடியாக அவர் கண்ணூர் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு அங்கு சிகிச்சை நடைபெற்று வருகிறது. சம்பவம் அறிந்தவுடன் கேரளா முதல்வர் பினராய் விஜயன் மருத்துவமனை சென்று வீணா ஜார்ஜை சந்தித்து உடல் நலம் விசாரித்தார்.

இதற்கு இடையே அமைச்சரை தாக்கியதை கண்டித்து மாநில முழுவதும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது திடீரென காங்கிரஸ் கட்சியின் கொடிக்கம்பங்கள், பேனர்கள் சேதப்படுத்தப்பட்டன. பல்வேறு பகுதிகளில் காங்கிரஸ், சிபிஎம் தொண்டர்கள் நேருக்கு நேர் மோதினார்கள். இந்த நிலையில் ந நள்ளிரவு கண்ணூர் அருகே கோடியேறி என்ற பகுதியில் உள்ள காங்கிரஸ் அலுவலகத்திற்கு தீவைக்கப்பட்டது. இதை அறிந்ததும் போலீசாரும், தீயணைப்பு வீரர்களும் விரைந்து சென்று தீய அணைத்தனர்.

இதற்கிடையே அமைச்சரை தாக்கிய காங்கிரஸ் மாணவர் அமைப்பினர் 5 பேரும், கருப்புக்கொடி காண்பித்த இளைஞர்கள் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த 10 பேர் என மொத்தம் 15 பேரை போலீசார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

# கன்னியாகுமரி அருகே நெல்லையை சேர்ந்த ஹிட்டாச்சி டிரைவர் அடித்து கொலை

கன்னியாகுமரி, பிப்.27–

‘கன்னியாகுமரி அருகே கொட்டாரம் சந்திப்பில் இருந்து மகாராஜாபுரம் செல்ல சாலையில் பெட்ரோல் பங்கு ஒன்று உள்ளது. இதன் அருகே நேற்று காலை சுமார் 35 வயது மதிக்கத்தக்க வாலிபர் ஒருவர் முகம் சிதைந்த நிலையில் கொலை செய்யப்பட்டு கிடந்தார். இதனை கண்டவர்கள் கன்னியாகுமரி போலீசருக்கு தகவல் தெரிவித்தனர். கன்னியாகுமரி ஏடிஎஸ்பி மதியழகன் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று கொலை செய்யப்பட்ட வாலிபரின் உடலை பார்வையிட்டு, மோப்பநாய் வரவழைக்கப்பட்டு விசாரித்தனர்.

போலீஸாரின் முதற்கட்ட விசாரணையில் கொலை செய்யப்பட்டவர் நெல்லை மாவட்டம் மானூர் பகுதியை சேர்ந்த செல்லபாண்டி (39) என்பதும் ஹிட்டாச்சி வாகன டிரைவர் என்பதும் தெரிந்தது. இவர் கொட்டாரம் பகுதிக்கு கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு வேலைக்கு வந்துள்ளதும் தெரிய வந்தது. மேலும் இவருடன் ஒரு வாலிபர் தங்கி இருந்துள்ளார். இந்த நிலையில் தான் செல்லப்பாண்டி அடித்து கொலை செய்யப்பட்ட சம்பவம் நடந்துள்ளது.

இதையடுத்து போலீசார் செல்ல பாண்டியன் உடலை கைப்பற்றி குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பிரேத பரிசோதனை வந்த பிறகு அவர் எப்படி கொலை செய்யப்பட்டார் என்ற விவரம் தெரிய வரும் என்று போலீசார் தெரிவித்தனர். மேலும் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மதுரை அறிவுரைக் குழுமத்திற்கென. மதுரை மாவட்டம், வடக்கு வட்டம், ரேஸ்கோர்ஸ் காலனியில் 1 கோடியே 45 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அலுவலகக் கட்டடத்தை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள். அதனை தொடர்ந்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை அறிவுரைக் குழுமத்தின் தலைவரும் ஓய்வு பெற்ற நீதியரசருமான அருணா ஜெகதீசன் ஆகியோர் குத்துவிளக்கேற்றி வைத்து பார்வையிட்டார்கள். உறுப்பினர்கள் ஓய்வு பெற்ற நீதியரசர்கள் எஸ்.பாஸ்கரன் மற்றும் எஸ்.ஆனந்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி (மதுரை வடக்கு). மு.பூமிநாதான் (மதுரை தெற்கு) ஆகியோர் உடன் உள்ளனர்.

# விளாத்திகுளம் அருகே ஜெயலலிதாவின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு முதியோர் இல்லத்தில் உணவுகள் வழங்கிய முன்னாள் அமைச்சர் கடம்பூர் ராஜூ



விளாத்திகுளம், பிப்ரவரி. 27-

தமிழக முன்னாள் முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதாவின் 78வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே நாகலாபுரம் தேனம்மாள் முதியோர் இல்லத்தில் உள்ள 60க்கும் மேற்பட்ட முதியோர்களுக்கு, விளாத்திகுளம் அரசு போக்குவரத்து அண்ணா தொழிற்சங்கம் சார்பில் பழம்,பிஸ்கட்,இட்லி,கேசரி உள்ளிட்ட உணவு பொருட்களை முன்னாள் அமைச்சரும் தற்போதைய கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினருமான கடம்பூர் ராஜு வழங்கினார், அப்போது அவர் பேசுகையில் அம்மாவின் பிறந்த நாளை நாங்கள் பல்வேறு வகையில் கொண்டாடினாலும் கூட எங்களுக்கு அம்மா அவர்கள் சொன்னது, என்னுடைய பிறந்தநாளை ஆடம்பரமாக கொண்டாடாமல் மக்களுக்கு பயனுள்ள வகையில், ஏழை எளிய மக்களுக்கு முதியோர்களுக்கு அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்தால்தான் எனக்கு வளங்களைத் தரும் என்று முன்னாள் முதல்வர் ஜெயலலிதா கூறியதை நினைவு கூர்ந்து கடம்பூர் ராஜு பேசினார்.

இந்நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சின்னப்பன், மாவட்டம் முன்னாள் கவுன்சிலர் சத்யா, வடக்கு மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர் குட்லக் செல்வராஜ், ஒன்றிய செயலாளர்கள் பால்ராஜ்,போடுசாமி மற்றும் அதிமுக நிர்வாகிகள் ராமநாதன், பிரவீன், அண்ணா போக்குவரத்து தொழிலாளர் சங்க செயலாளர் கண்ணன், பொருளாளர் செல்வகுமார், பாலமுருகன் பிச்சைமாரியப்பன், ராமசின்னு, சண்முகராஜ், சந்தனமகாலிங்கம்,. மதுரை வீரன் உட்பட தொழிற்சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# கோடிமுனை கடற்கரையில் இறந்து ஒதுங்கிய பெண் டால்பின்



குளச்சல், பிப். 27–

குளச்சல் அருகே கோடிமுனை கடற்கரையில் நேற்று முன்தினம் மாலையில் டால்பின் மீன் ஒன்று இறந்து கரை ஒதுங்கிய நிலையில் காணப்பட்டது. சுமார் 5.5 அடி நீளமும், 100 கிலோ எடையும் கொண்ட அந்த மீனை பார்த்த அந்த பகுதி மீனவர்கள் சைமன்காலனியில் உள்ள மீன் பிடி பயிற்சி நிறைய அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்தனர்.

தகவலின் பேரில் குளச்சல் மீன்பிடி துறைமுக உதவி இயக்குனர் பிரிஜில் கிராஸ், சைமன்காலனி மீன்பிடி பயிற்சி நிலைய மேற்பார்வையாளர் சந்தோஷ்குமார் ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பார்வையிட்டனர்.

பின்னர் அவர்கள் வனத்துறைக்கு தகவல் தெரிவித்தனர். அதை தொடர்ந்து மாவட்ட வன அதிகாரி அன்பு உத்தரவின் பேரில் குலசேகரம் வன சரக வன பாதுகாவலர் பூவரசன், வனத்துறை கால் நடை மருத்துவர் மனோகரன், குலசேகரம் வன செயலாளர் ராமு, வனவர் பாலமுருகன் ஆகியோர் நேற்று கோடிமுனைக்கு வந்தனர்.

பின்னர் இறந்து கரையொதுங்கிய டால்பினை கால் நடை மருத்துவர் மனோகரன் பிரேத பரிசோதனை செய்தார். பின்னர் வனத்துறையினர் பொக்லைன் இயந்திரத்தை வரவழைத்து கடற்கரையோரம் பெரிய பள்ளம் தோண்டி டால்பினை புதைத்தனர். பிரேத பரிசோதனை அறிக்கை வந்த பிறகு டால்பின் எப்படி இறந்தது ? என்பது தெரியவரும் என தெரிவித்தனர். மேலும் இறந்து ஒதுங்கியது பெண் டால்பின் எனவும், இது கருப்பு வகையான இனத்தைச் சேர்ந்தது எனவும் வனத்துறையினர் தெரிவித்தனர்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

# தருமபுரி வணிகர் சங்கத்தின் சார்பில் கடையடைப்பு மற்றும் தர்ணா போராட்டம்



தருமபுரி, பிப்ரவரி. 27-

தருமபுரி பேருந்து நிலையம் மாற்றப்பட்டதின் காரணமாக பழைய பேருந்து நிலையத்தை சார்ந்து வாழ்ந்து வந்த சிறு மற்றும் குறு வணிகர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். தினசரி வர்த்தகம் மிகுந்தளவில் குறைந்துள்ளதால் பல குடும்பங்கள் வாழ்வாதார சிரமத்திற்கு உள்ளாகி உள்ளன. அதேபோல் பொது மக்கள், மாணவர்கள் மற்றும் முதியவர்களும் புதிய இடம் மாற்றத்தால் தினசரி பயணத்தில் சிரமத்தை எதிர்கொள்கிறார்கள். இந்த நிலையை கண்டித்து மற்றும் வணிகர்கள், பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு நியாயமான தீர்வு வழங்க வேண்டும் என்பதற்காக ஒரு நாள் கடையடைப்பு மற்றும் தர்ணா போராட்டம் நடைபெற்றது. இந்த தர்ணா போராட்டத்தில் வியாபாரிகள் பழைய பி. ஆர். ராஜகோபால் கவுண்டர் புறநகர் பேருந்து நிலையத்தில் அனைத்து பேருந்துகளும் வந்து செல்ல வேண்டும். தற்காலிகமாக செயல்பட்டு வரும் பேருந்து நிலையத்தை நிரந்தர பேருந்து நிலையமாக செயல்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையை மாற்றிடவும் மாவட்ட நிர்வாகம் உடனடியாக இந்த விஷயத்தில் கவனம் செலுத்தி உரிய தீர்வு வழங்க வேண்டுமென வணிகர்கள் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.